**கிருஷ்ணகிரியில் 25-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 22 Mar 2010 06:48:36 AM IST

கிருஷ்ணகிரி, மார்ச் 21: கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மார்ச் 25-ம் தேதி (வியாழக்கிழமை) காலை 11 மணிக்கு நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் வே. க.சண்முகம் தெரிவித்துள்ளார்.

கூட்டத்தில் விவசாயிகள் பங்கேற்று தங்களது குறைகளைத் தெரிவித்து பயன்பெறலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

**மக்காச்சோளம் சாகுபடி குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி**

First Published : 22 Mar 2010 06:47:59 AM IST

போச்சம்பள்ளி, மார்ச் 21: மத்தூர் அடுத்த பச்சூர் கிராமத்தில் ஆத்மா திட்டத்தின்கீழ் மக்காச்சோளம் குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது. திட்ட ஒருங்கிணைப்பாளர் பெரியசாமி தலைமை வகித்தார். ஆத்மா திட்டத் தலைவர் சாந்தமூர்த்தி, ஊராட்சித் தலைவர் ஜெயராமன், வேளாண் அலுவலர்கள் துரைராஜ், முனிராஜ் உள்ளிட்டோர் பேசினர்.

**காய்கறி விலை உயர்வு!**

First Published : 22 Mar 2010 06:47:36 AM IST

போச்சம்பள்ளி, மார்ச் 21: போச்சம்பள்ளி ஞாயிறு வாரச்சந்தையில் கடந்த வாரத்தைவிட, இந்த வாரம் காய்கறிகள் கூடுதல் விலைக்கு விற்கப்பட்டன.

பீட்ரூட், காலிபிளவர், கத்திரிக்காய், கேரட், பாகற்காய் உள்ளிட்டவற்றின் விலை ரூ.1 முதல் ரூ.2 வரை கூடுதல் விலைக்கு விற்றது. தக்காளி விலை ரூ.2.50 முதல் ரூ.3 வரையிலும் கூடுதலாக விற்கப்பட்டன.

பூண்டு 1 கிலோ ரூ.38, சின்னவெங்காயம் 1 கிலோ ரூ.8-க்கும், பெரிய வெங்காயம் ரூ.10-க்கும் விற்பனையானது.

**கரும்புக்கு விலையை உயர்த்தி வழங்கிய தமிழக அரசுக்கு பாராட்டு**

First Published : 22 Mar 2010 02:49:06 AM IST

மயிலாடுதுறை, மார்ச் 21: கரும்பு விலையை உயர்த்தி வழங்கிய தமிழக முதல்வர், துணை முதல்வர் ஆகியோருக்கு அகில இந்திய விவசாய சங்கங்கள் பாராட்டு தெரிவித்துள்ளன.

இதுகுறித்து, அகில இந்திய விவசாய சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் ராஜா, துணைத் தலைவர் ராஜ்குமார், முதன்மைச் செயலர் எம்பாவை.யோகநாதன், பொது செயலர் விருத்தகிரி, பொருளர் தணிக்காச்சலம் உள்ளிட்டோர் கூட்டாக வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வறட்சி, வெள்ளம், ஆள்கள் பற்றாக்குறை, மின்சாரத் தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு இடர்பாடுகளுக்கிடையில் கரும்பு சாகுபடி செய்து வந்த விவசாயிகள் கரும்புக்கு கட்டுபடியாகக் கூடிய விலையை வழங்க வேண்டும் என்று நீண்ட நாள்களாக கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதை ஏற்று தமிழக நிதிநிலை கூட்டத் தொடரில் எதிர்வரும் 2010-11 அரைவை பருவத்திற்கு மத்திய அரசு விலையை அறிவிக்காத போதும் முன்கூட்டியே தமிழக அரசு கரும்பு டன் 1 க்கு 2 ஆயிரம் ருபாய் அறிவித்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

இதற்காக தமிழக முதல்வர், துணை முதலவர் வேளாண் துறை அமைச்சர் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

மேலும், 2009-10 அரவை பருவத்திற்கு ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட கொள்முதல் விலை கட்டுப்படியாகாத நிலையில் டன்னுக்கு ரூ. 100 உயர்த்தி அளித்திருப்பது ஏமாற்றத்திலும் ஆறுதல் அளிக்கும் வகையில் உள்ளது என தெரிவித்துள்ளனர்.

**விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்ட மாநாடு**

First Published : 22 Mar 2010 12:45:42 AM IST

மானாமதுரை, மார்ச் 21: சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில் விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சிவகங்கை மாவட்ட மாநாடு நடைபெற்றது.

இம் மாநாட்டுக்கு இச் சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஏ.பொன்னுச்சாமி தலைமை வகித்தார், பொருளாளர் ஜெயராமன் வரவேற்றார், செயலர் ஆர்.கே.தண்டியப்பன் வேலைஅறிக்கை சமர்ப்பித்தார்.

மாநாட்டில் விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாநிலப் பொருளாளர் மணி சிறப்புரையாற்றினார். மாநாட்டை வாழ்த்தி அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்க மாவட்டப் பொருளாளர் ஷேக்முத்து, கரும்பு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர்  சக்திவேல் உள்ளிட்டோர் பேசினர்.

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சங்கத்துக்கு சிவகங்கை மாவட்ட புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டவர்கள்: தலைவர்- ஏ.பொன்னுச்சாமி, துணைத் தலைவர்கள்- திருநாவுக்கரசு, சோணைமுத்து, செயலர்- ஆர்.கே.தண்டியப்பன், துணைச் செயலர்கள்- பி.அய்யனார், எம்.ரவி, பொருளாளர்- கே.அழகர்சாமி மற்றும் 17 பேர் மாவட்டக்குழு உறுப்பினர்கள்.

சிவகங்கை மாவட்டத்தில் நத்தம், புறம்போக்கு நிலங்களில் பல ஆண்டுகள் வீடுகட்டி குடியிருந்துவரும் மக்களுக்கு மனைப்பட்டா வழங்க வேண்டும். குடிமனைப்பட்டா வழங்கி பல ஆண்டுகள் கடந்த பின்பும் நில அளவை செய்யாத நிலங்களை அளந்து தர வேண்டும்.  வறுமையில் உள்ள அனைத்துப் பகுதி மக்களையும் வறுமைக்கோடு பட்டியலில் சேர்த்து இவர்களுக்கு அரசின் திட்டங்கள் கிடைத்திடச் செய்ய வேண்டும். மானாமதுரை தாலுகா பகுதி வைகையாற்றுக்குள் சாக்கடை கலப்பதால் குடிநீர்த் திட்டங்கள் பாதிக்கப்பட்டு சுகாதாரமற்ற குடிநீர் சென்று கொண்டிருக்கிறது.

ஆற்றுக்குள் சாக்கடை செல்லாமல் இருக்க மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாவட்ட துணைச் செயலர் ரவி நன்றி கூறினார்.

**கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2,500: தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்**

First Published : 22 Mar 2010 06:58:42 AM IST

வேலூர், மார்ச் 21: விவசாய விளை பொருள்களுக்கு கட்டுப்படியான விலை தர வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் வாணியம்பாடி தாலுக்கா 9-வது மாநாட்டில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கேத்தாண்டபட்டியில் வெள்ளிக்கிழமை நடந்த இம்மாநாட்டில், விவசாய விளை பொருள்களுக்கு கட்டுப்படியான விலை கொடுக்க வேண்டும். கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2500 விலை கொடுக்க வேண்டும். பருவ மழை பொய்த்துள்ளதால்

வேலூர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். மரபணு மாற்றப்பட்ட விதைகளை தடை செய்ய வேண்டும்.

கூத்தாண்டகுப்பம் ஐய்யன் ஏரிக்கு கல்லாறில் இருந்து கால்வாய் அமைக்க வேண்டும். ஆண்டியப்பனூர் வருவாய் கோட்டத்தைப் பிரித்து கேத்தாண்டப்பட்டி வருவாய் கோட்டம் அமைத்திட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத் துணைச் செயலாளர் இரா.முல்லை தலைமை வகித்தார். மாநில பொறுப்பு செயலாளர் எம்.ஆறுமுகம் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

மாவட்டச் செயலாளர் ஏ.சி.சாமிக்கண்ணு, செயலாளர் எஸ்.கண்ணு, தமிழக விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் சி.கே.தனபால், ஏஐடியூசி திருப்பத்தூர் வட்டச் செயலாளர் கே.ஆனந்தன், கரும்பு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் எம்.நந்தி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாவட்ட அமைப்பாளர் கே.முருகன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

**26-ல் வேளாண் குறைதீர்ப்பு நாள் கூட்டம்**

First Published : 22 Mar 2010 06:11:38 AM IST

ஈரோடு, மார்ச் 21: ஈரோடு மாவட்ட விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம் வரும் 26-ம் தேதி நடைபெற உள்ளது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அன்று காலை 10 மணிக்கு நடைபெறும் இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் ஆர்.சுட லைக்கண்ணன் பங்கேற்று, விவசாயிகள், வேளாண் சங்கப் பிரதிநிதிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெறுகி றார். அனைத்துத்துறை அலுவலர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்**

First Published : 22 Mar 2010 06:18:17 AM IST

சேலம், மார்ச் 21: மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 72.78 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 1,158 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 1,900 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 35.13 டி.எம்.சி.

**கரும்பு கொள்முதல் விலை உயர்வு: இந்திய விவசாய சங்கம் நன்றி**

First Published : 22 Mar 2010 06:54:24 AM IST

திருவண்ணாமலை, மார்ச் 21: கரும்பு கொள்முதல் விலை டன்னுக்கு ரூ.2 ஆயிரம் உயர்த்தி வழங்கிய தமிழக முதல்வருக்கு இந்திய விவசாய சங்கம் நனறி தெரிவித்துள்ளது.

இது குறித்து அதன் துணைத் தலைவர் கே.வி.ராஜ்குமார் வெளியிட்டுள்ள அறிக்கை:

கரும்பு விவசாயிகள் கொள்முதல் விலையை உயர்த்தித் தரவேண்டும் என பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர். வரும் 2010-11-ம் ஆண்டு அரவைப் பருவத்துக்கு மத்திய அரசு அறிவிப்பு வெளியாகாத நிலையில் தமிழக அரசு டன்னுக்கு ரூ.2 ஆயிரம் அறிவித்துள்ளது.

கடந்த 2009-10-ம் ஆண்டு அரவைப் பருவத்துக்கு நிலுவைத் தொகை கட்டுப்படியாகாத நிலையில் கூடுதல் தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.100 வழங்கியது விவசாயிகளுக்கு ஆறுதல் தருகிறது. கரும்பு விவசாயிகளின்

கோரிக்கைகளை நிறைவேற்றி வரும் தமிழக முதல்வர், துணை முதல்வர், வேளாண் துறை அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என அவர் தெரிவித்துள்ளார்.

**பயிர்க் கடன்களுக்கு வட்டியை குறைக்க மத்திய அரசு ஆலோசனை**

First Published : 21 Mar 2010 04:33:53 AM IST



நாசிக், மார்ச் 20: பயிர்க் கடன்களுக்கான வட்டியை ஒரு சதவீதம் குறைக்க மத்திய அரசு ஆலோசித்து வருவதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் சரத்பவார் கூறியுள்ளார்.

மகாராஷ்டிர மாநிலம் நாசிக் நகருக்கு அருகே உள்ள பிம்பல்காவ்ன் பஸ்வந்த் என்ற இடத்தில் சனிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் பேரணி மற்றும் மகாராஷ்டிர மாநில மூத்த காங்கிரஸ் தலைவர் துலாஜி நானா பாட்டீலின் 100 வது பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு அவர் பேசினார். அப்போது அவர் கூறியது:

"நான் விவசாயம் சார்ந்த நிறுவனங்கள் பலவற்றுடன் இணைந்து பல ஆண்டுகளாக பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருகிறேன். விவசாயிகளின் இன்னல்களை நான் நன்கு புரிந்து கொண்டிருக்கிறேன்.

தற்போது 3 லட்சம் ரூபாய் வரையிலான பயிர்க் கடன்களுக்கு வட்டி 5 சதவீதமாக உள்ளது. இதை 4 சதவீதமாகக் குறைக்க மத்திய அரசு ஆலோசித்து வருகிறது' என்றார்.

தினமலர்

**அடிச்சது யோகம் : விளைந்ததில் நஷ்டம்; விலையில் லாபம் : ஏக்கருக்கு லட்சம், விவசாயிகளுக்கு மிச்சம்**

அன்னூர் : மார்க்கெட்டில் கிடைக்கும் அதிக விலையால் மஞ்சள் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ஒரு லட்சம் ரூபாய் லாபம் கிடைத்துள்ளது.

மஞ்சள் பயிருக்கு அதிக அளவில் நீர் தேவை, விதைமஞ்சள், உரம், பூச்சி மருந்து ஆகியவற்றுக்கு கூடுதல் முதலீடு தேவை, விதைத்த பின் 11 மாதங்கள் வரை காத்திருக்க வேண்டும். வேர் அழுகல் நோய் தாக்கினால் மகசூல் மிகவும்

குறைந்து விடும். ஐந்து சதவீதத்திற்கும் குறைவான விவசாயிகள் தான் மஞ்சள் பயிரிடுகின்றனர்.
அன்னூர் வட்டாரத்தில் வடக்கலூர், அல்லப்பாளையம், பொன்னேகவுண்டன்புதூர், செட்டிபாளையம் உள்பட 30 ஊர்களில் மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளது. பிப்ரவரி, மார்ச் மாதங்களில் விதைப்பு செய்யப்பட்ட மஞ்சள் கடந்த மாதம் அறுவடை செய்யப்பட்டது. கோவை மற்றும் ஈரோடு மார்க்கெட்டிற்கு மஞ்சளை விற்பனைக்கு கொண்டு சென்ற விவசாயிகள் அதிக விலையால் மகிழ்ச்சியடைந்தனர்.
இது குறித்து வசுவன்குட்டை விவசாயி வேலுச்சாமி கூறியதாவது: மஞ்சள் பயிரில் செலவும், வேலையும் அதிகம். ஐந்து நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சுதல், மூன்று முறை களை எடுத்தல், உரம், பூச்சி மருந்து அடித்தல், மஞ்சளை தோண்டி எடுத்த வேக வைத்தல் மற்றும் பாலிஷ் செய்தல் ஆகிய பணிகள் உள்ளது.
விளைந்த மஞ்சளை தோண்டி எடுக்க மட்டும் ஏக்கருக்கு 11,000 ரூபாய் செலவாகிறது. ஏக்கருக்கு மொத்தமாக 50 ஆயிரம் ரூபாய் செலவு ஆகிறது. மழை இல்லாததால் இந்த சீசனில் மகசூல் குறைவாகவே கிடைத்தது. பச்சை மஞ்சள் 10 டன்னுக்கு பதில் ஐந்து டன் தான் கிடைத்தது. கோவை, ஈரோடு மார்க் கெட்டில் மஞ்சளுக்கு நல்ல விலை கிடைக்கிறது.

காய்ந்த மஞ்சள் ஒரு குவிண்டாலுக்கு 14 ஆயிரம் ரூபாய் விலை கிடைக்கிறது. சில வியாபாரிகள் தோட்டங்களுக்கு வந்து விலை பேசுகின்றனர். அனைத்து செலவுகளும் போக ஏக்கருக்கு ஒரு லட்சம் ரூபாய் லாபம் கிடைத்துள்ளது. வழக்கமான மகசூல் கிடைத்திருந்தால், ஏக்கருக்கு 2 லட்சம் ரூபாய்க்கு மேல் லாபம் கிடைத்திருக்கும். இவ்வாறு விவசாயி வேலுச்சாமி தெரிவித்தார்.

இது குறித்து வேளாண் உதவி இயக்குனர் (பொறுப்பு) சீனிராஜ் கூறியதாவது: அன்னூர் வட்டாரத்தில் 800 ஏக்கரில் மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளது. தண்ணீர் வசதி உள்ளவர்கள் மஞ்சள் பயிரிட்டால் நல்ல லாபம் பெறலாம். மஞ்சள் பயிருக்கு மண் வளத்தை பேண வேண்டும். ஜிப்சம் இட வேண்டும். வேர் அழுகலை தடுக்க 'டிரைகோடெர்மா விரிடி' இட வேண்டும். நடும்போதும், மூன்று மாதங்களுக்கு பின்பும் நுண்ணூட்டசத்து இடலாம். மண் புழு உரத்தை பயன்படுத்தலாம். பயிருக்கு தழைச்சத்து, சாம்பல் சத்து, மணிச்சத்துடன், துத்தநாகம், தாமிரம், இரும்பு சத்து ஆகியவையும் குறைந்த அளவில் தேவை. இவைகளை கடைபிடித்தால் ஏக்கருக்கு 10 முதல் 12 டன் வரை மஞ்சள் விளைச்சல் பெறலாம். இவ்வாறு சீனிராஜ் தெரிவித்தார்.
அதிக விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மேலும் பல விவசாயிகள் அடுத்த சீசனுக்கு மஞ்சள் பயிரிட ஆர்வம் தெரிவித்துள்ளனர்.

**சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசனம் மானியத்திட்டத்திற்கு அழைப்பு**

உடுமலை : 'சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசனம் அமைப்பதற்கு வழங்கப்படும் மானியத்திட்டத்தை பயன்படுத்தி கொள்ள முன்வரவேண்டும்', என வேளாண் பொறியியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.
வேளாண் பொறியியல் துறையின் திட்டங்கள் உடுமலை பகுதி விவசாயிகளுக்கு கிடைக்காதது மற்றும் விண்ணப்பங்களை அளிக்க அதிகாரிகளை தேட வேண்டியுள்ளது குறித்து 'தினமலரில்' செய்தி வெளியானது.
இதனையடுத்து, உடுமலை, மடத்துக்குளம், குடிமங்கலம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் வேளாண் பொறியியல் துறை விண்ணப்பங் களை பெற மாவட்ட கலெக்டர் நடவடிக்கை எடுத்துள்ளார்.
வேளாண் பொறியியல் அதிகாரிகள் கூறியதாவது: நீர் வள நில வள திட்டத்தின் கீழ் வேளாண் பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசனம் அமைக்க அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பாசன சங்கங் கள் மூலம் பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சொட்டு நீர் பாசனத்திற்கு திட்டத்தின் கீழ் 65 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.
அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு 5 எக்டேர் வரை மானியம் கிடைக்கும். விவசாயிகள் கிராம நிர்வாக அலுவலர்

சான்றிதழ் பெற்று இத்திட்டத் திற்கு விண்ணப்பிக்கலாம். பண்ணை கருவிகள் மற்றும் கசிவு நீர் குட்டைகள் அமைப்பதற்கும் விண்ணப் பங்கள் பெறப்படுகிறது.
தற்போது, நீர் வள நில வளத்திட்டத்திற்கு பாசன சங்கங்கள் இரண்டாக பிரிக்கப்பட்டு பொள்ளாச்சி, தாராபுரம் அலுவலகங்கள் மூலம் மானிய திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மின்சிக்கனத் திற்காக பழைய பம்புகளை மாற்றும் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி முழுவதுமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது', இவ்வாறு தெரிவித்தனர்.

**எரிகட்டிகளை தயாரிக்க புது இயந்திரம் தேவை : வேளாண் பல்கலை துணைவேந்தர் விருப்பம்**

கோவை : "குறைந்த செலவில், அதிக உயிரி எரிகட்டிகள் கிடைக்கக்கூடிய இயந்திரம் தயாரிப்பது அவசியம்," என, வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி பேசினார். வேளாண் கழிவு பொருட்களிலிருந்து உயிரி எரிகட்டி தயாரிப்பு குறித்த பயிலரங்கு, தமிழ்நாடு வேளாண் பல்கலையில் நடந்தது.
பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி பயிலரங்கை துவக்கி வைத்து பேசியதாவது: இந்தியாவில் ஆண்டுக்கு 30 கோடி டன் விவசாய கழிவுகள் உற்பத்தியாகிறது. அவற்றை மாட்டுத்தீவனம், மாட்டு கொட்டகை, வீட்டுக்கூரை அமைக்கவும், அடுப்பு எரிக்கவும் பயன்படுத்துகின்றனர். இருப்பினும், ஏழு கோடி டன் கழிவுகள் வீணாகிறது. வீணாகும் கழிவுகள்,நிலத்தை உழுவதற்கு முன், அப்புறப்படுத்தப்பட்டு, கொளுத்தப்படுகின்றன. இவற்றால், காற்று, நிலம் மாசுபடுகிறது. விவசாய கழிவுகளில் எரிசக்தி மிகவும் அதிகம். ஒரு கிலோ கழிவில், 3,600 முதல் 4,400 கிலோ வெப்பம் கிடைக்கிறது.
வீணாகும் விவசாய கழிவுகளை சேகரித்து, உயிரி எரிகட்டிகளாக மாற்றலாம். இதனால், பல லட்சம் மதிப்புள்ள எரிசக்தி கிடைக்கும். விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும். இந்தியாவில் எரிக்கட்டி உற்பத்தி எதிர்பார்க்கும் அளவு இல்லை. எரிகட்டி தயாரிக்கும் தொழிற்சாலைகள் மரத் தூளை நம்பி உள்ளன. மரத்தூளின் விலை அதிகரித்து, எரிகட்டி உற்பத்தி விலை கூடியுள்ளது. குறைந்த செலவில் அதிக உயிரி எரிகட்டிகள் கிடைக்கக்கூடிய இயந்திரம் தயாரித்தால், இத்தொழிலை பரவலாக பல்வேறு இடங்களில் செய்யலாம்; உற்பத்தி செலவு குறையும். பயிர் சுழற்சிக்கு ஏற்ப இடுபொருட்களை மாற்றி எரிகட்டி தயாரிக்க வேண்டும்.
இவ்வாறு,வேளாண்மை பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி பேசினார்.
போபால், மத்திய வேளாண் பொறியியல் நிறுவன முதன்மை விஞ்ஞானி அனில்குமார் துபே பேசுகையில்,"கிராமப்புறங்களில் தேவையான அளவுக்கு சக்தி கிடைப்பதில்லை. கிடைக்கக்கூடிய சக்தியின் திறனும் போதிய அளவு இல்லை. கிராமப்புறங்களை மேம்படுத்த இவை தேவை. தமிழ்நாடு வேளாண் பல்கலையில் வேளாண் கழிவு பொருட்களிலிருந்து எரிகட்டி தயாரிப்பதில் தீவிர ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க பணிகள் நடப்பது பாராட்டுக்குரியது," என்றார்.
விழாவில், வேளாண் பொறியியல் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) மனோகர் ஜேசுதாஸ் வரவேற்றார். உயிரி எரிசக்தி துறை தலைவர் வெங்கடாசலம் நன்றி கூறினார்.

**விருத்தாசலத்தில் முந்திரி சாகுபடி பயிற்சி முகாம் துவக்க விழா**

விருத்தாசலம் : விருத்தாசலம் வேளாண்மை பல்கலை கழக மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் முந்திரி சாகுபடி பயிற்சி முகாம் துவக்க விழா நடந்தது.
ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலைய இயக் குனர் ஜெயராஜ் தலைமை தாங்கி முகாமை துவக்கி வைத் தார். மண்டல ஆராய்ச்சி நிலைய தலைவர் மாரிமுத்து வரவேற்றார். வேளாண் அறிவியல் நிலைய தலைவர் சாத் தையா முந்திரி பருப்பு மற்றும் பழங்களின் முக் கியத்துவம் குறித்தும், ஏற்றுமதி சந்தை வாய்ப் புகள் குறித்தும் பேசினார். முந்திரி விளைச் சலை அதிகரிக்க கடைபிடிக்க வேண்டிய மேலாண்மை தொழில் நுட்பங்கள் குறித்து இணை பேராசிரியர் அனீசாராணி

பேசினார். பேராசிரியர் ஜீவா, இணை பேராசிரியர் அம்பேத்கார், உதவி பேராசிரியர் கண்ணன் மற்றும் முந்திரி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**கொள்முதல் நிலையங்களுக்கு நெல் வழங்க விவசாயிகள் தயக்கம்**

திண்டுக்கல் : நெல் குவிண்டாலுக்கு ஊக்கத்தொகையுடன் ஆயிரம் ரூபாய் வழங்க அரசு தயாராக இருந்தும் கொள்முதல் நிலையங்களுக்கு நெல் வழங்க விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர்.
மாநிலம் முழுவதும் ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு நெல் கொள்முதல் நிலையங்களை திறந்துள்ளது. இங்கு நெல்லுக்கு குவிண்டாலுக்கு ஆயிரம் ரூபாயும், ஐம்பது ரூபாய் ஊக்கத்தொகையும் வழங்கப்படுகிறது. இவ்வளவு வழங்கியும் கொள்முதல் நிலையங்களுக்கு நெல் வழங்க விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. நெல் வழங்கும் விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்ய ஒரு மாதத்திற்கு மேல் ஆகிறது. நெல் கொடுத்து விட்டு இவ்வளவு நாள் காத்திருக்க விவசாயிகளின் பொருளாதார சூழல் சாதகமாக இல்லை.

இந்த தாமதத்திற்கு காரணம் என்ன என அதிகாரிகளிடம் கேட்டால், 'அரசு ஒதுக்கீடு வந்தால் தானே பட்டுவாடா செய்ய முடியும்' என கூறுகின்றனர். ஆனால் தனியார் சிலர் குறைவான தொகைக்கு வாங்கினாலும் உடனேயே பட்டுவாடா செய்கின்றனர். எனவே விவசாயிகள் சிறிதளவு விலை குறைந்தாலும் பரவாயில்லை என தனியாருக்கே கொடுக்கின்றனர். நெல்லுக்கு குறைந்தபட்ச தொகை வழங்க வேண்டும் என்ற அரசின் நோக்கம் வீணாகிறது. கொள்முதல் நிலையங்களில் உடனடியாக பட்டுவாடா வழங்கினால் நெல் வழங்க தயாராக இருப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**பருத்தி விலை அதிகரித்தபோதும் விதை கிடைக்காமல் சாகுபடி பாதிப்பு**

திண்டுக்கல் : பருத்தி விலை அதிகரிப்பால், சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் விதை கிடைக்காமல், வேளாண் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது.
சில ஆண்டுகளுக்கு முன்பு வரை, திண்டுக்கல், தேனி, மதுரை, கரூர் உள்ளிட்ட மாவட்டங்களில், பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. வெளிநாட்டு ஏற்றுமதியில் ஏற்பட்ட தொய்வு, மழைகுறைவு போன்றவற்றால் தரம் பாதிப்படைந்து, போதிய விலை கிடைக்காத நிலை உருவானது. இதையடுத்து பெரும்பாலான விவசாயிகள், கரும்பு, மக்காச்சோளம் சாகுபடி செய்யத் துவங்கினர்.
பருத்தி உற்பத்தி குறைந்த நிலையில், கடந்த 2008 மற்றும் 2009ல் குவின்டால் ஒன்றிற்கு 2 ஆயிரம் முதல் 2 ஆயிரத்து 400 வரை கொள்முதல் செய்யப்பட்டது. போதிய வரவேற்பு இல்லாததால், பருத்தி விதை உற்பத்தி மற்றும் சப்ளையை வேளாண்துறையும் கண்டுகொள்ளவில்லை. தனியார் உரக்கடைகளிலும் விதையின் புதிய வரவுகள் குறைந்தது.பருத்தி உற்பத்தி பாதிக்கப்பட்டு, மில்களுக்கான சப்ளையும் குறைந்தது.
இந்நிலையில் பருத்தியின் தேவை சமீபகாலமாக அதிகரித்துள்ளது.தேவைக்கேற்ப பருத்தியை உற்பத்தி இல்லாத நிலையில் விலை அதிகரித்து, தற்போது குவின்டால் ஒன்றிற்கு 3 ஆயிரத்து 400 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. இந்த விலை ஏற்றத்தின் காரணமாக நெல் தரிசு நிலங்களில் பருத்தி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டத் துவங்கியுள்ளனர்.

**விவசாயிகள் சங்க ஆலோசனைக் கூட்டம்**

புதுக்கோட்டை: புதுகையில் அனைத்து விவசாயிகள் சங்க ஆலோசனைக் கூட்டம் நடந்தது.தமிழ்நாடு விவசாயிகள் சங்க கவுரவத் தலைவர் அழகர்சாமி தலைமை வகித்தார். இந்திய கம்யூ. மாவட்ட செயலாளர் முத்துக்குமரன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் சோமையா, இந்திய விவசாயிகள் சங்க தலைவர் தனபதி, கட்சி சார்பற்ற விவசாயிகள் மேம்பாட்டு சங்க மாவட்ட செயலாளர் அப்பாவு பாலாண்டார், தமிழ்நாடு விவசாயிகள் சங்க தலைவர் செபஸ்தியான், மாவட்ட செயலாளர் பொன்னுச்சாமி, கல்லணை பாசனதாரர் கூட்டமைப்பு பொறுப்பாளர் ராமசாமி, விவசாயிகள் அமைப்பு தலைவர் ராமதீர்த்தர், விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலாளர் மணிவேல், மரம் தங்கசாமி உட்பட பலர் வாழ்த்தி பேசினர்.

கூட்டத்தில், கடந்த விவசாயிகள் குறை தீர் கூட்டத்தில் கலெக்டர், அதிகாரிகள் நினைத்தால் விவசாயிகள் தாங்க மாட்டீர்கள் என்று விவசாயிகளை மிரட்டும் வகையிலும், விவசாயிகளை கை நீட்டி பேசக்கூடாது என்று பஞ்சாயத்துதாரர் போன்றும் கூறியிருப்பது கண்டிக்கத்தக்கது. கலெக்டர் அவர் பேசிய வார்த்தைகளை திரும்பப் பெற வேண்டும் என்பது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**கரும்பு சோகை கம்போஸ்ட் தயாரிப்பு விளக்கப்பயிற்சி**

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு அடுத்த தெற்குகோட்டை கிராமத்தில் உள்ள பேராசிரியர் பழனிவேல் என்பவர் கரும்பு வயலில் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை தலைமை கரும்பு அலுவலர் குணசேகரன் தலைமையில் செயல்விளக்க பயிற்சிகள் நடந்தது. ஒரத்தநாடு கோட்ட கரும்பு அலுவலர் ஜீவானந்தம், 'கரும்பு அறுவடைக்குப்பின் கட்டை கரும்பு சாகுபடி செய்வதில் விவசாயிகள் எதிர்கொள்ளும் இடையூறுகளையும், கட்டை கரும்பு சாகுபடி செய்வதற்கு கரும்பு வயலில் சோகைகளை ஏன் தீயிட்டு கொளுத்தக்கூடாது,' என்பதை விளக்கினார்.

கட்டைக்கரும்பு முளைப்புத்திறன் தீயிடுவதால் மிகவும் பாதிக்கப்படும். அதிகம் பழுது ஏற்பட்டு கரும்பு பயிர் எண்ணிக்கை குறைந்து மகசூல் நடவு கரும்பை விட ஐந்து முதல் பத்து டன்கள் வரை இழப்பு ஏற்படும். நிலத்தில் வாழும் நன்மை செய்யும் நுண்ணுயிர்கள் அழியும். மண்ணின் தரம் குறையும். எனவே, சோ கைகளை அப்புறப்படுத்தி ஏக்கரில் நான்கு முத ல் ஐந்து டன் வரை காய்ந்த சோகையை மக்க வைத்து, இவற்றை உரமாக மாற்றம் செய்து பயன்பெறலாம், என தெரிவிக்கப்பட்டது.

ஒரு ஏக்கரில் கிடைக்கும் நான்கு முதல் ஐந்து டன்கள் காய்ந்த கரும்பு சோகையை வயலில் ஒரு ஓரத்தில் நீர் பாசன வசதி உள்ள இடத்தில் வைத்து ஒரு கிலோ நுண்ணூட்ட கலவை, 500 கிலோ ஆலை கழிவு, இரண்டரைக்கிலோ ராக் பாஸ்பேட், இரண்டு கிலோ ஜிப்சம், அரைக்கிலோ யூரியா ஆகியவற்றை நன்றாக கலந்து ஒரு டன் அளவுக்கு சோகையை பரப்பி, அதன் மேல் நுண்ணூட்ட கலவையை நான்கில் ஒரு பகுதியை தூவ வேண்டும்.

அதன் மேல் தண்ணீர் தெளிக்க வேண்டும். மீதமுள்ள மூன்று பகுதியை மூன்று அடுக்குகளாக தயார் செய்து, அதன் மேல் சோகை காற்றில் பறக்காமல் இருக்கும் வகையில் ஆலை கழிவு அல்லது மண் கொண்டுமூட வேண்டும்.அதில், வாரம் இரண்டு முறை தண்ணீர் தெளித்து 40 சதவீத ஈரப்பதம் இருக்கும்படி இரண்டு மாதம் பராமரித்து வந்தால் நல்ல தரமான ஊட்டமேற்றிய இய ற்கை உரம் ஒன்று முதல் ஒன்றரை டன் கிடைக்கும். இதை செயல் விளக்கம் மூலம் காண்பித்தனர். தவிர, கரும்பு வெட்டும் இயந்திரத்தின் செயல்பாடுகள், பயன்கள், செலவு மிச்சம் குறித்து செயல் விளக்கத்துடன் விளக்கப்பட்டது.

**இலவம் பஞ்சு விலை சரிவு : மலை விவசாயிகள் கவலை**

வருஷநாடு : வருஷநாடு பகுதியில் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு இலவபஞ்சு விலையில் கிலோவிற்கு பத்து ரூபாய் வரை சரிவு ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலையடைந் துள்ளனர்.
வருஷநாடு, வாலிப் பாறை, முருக்கோடை, சிங்கராஜாபுரம், சாந்திபுரம், காமராஜாபுரம் உட்பட மலை பகுதிகளில் இருபதாயிரம் ஏக்கர் பரப்பளவில் இலவச மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. இலவ பஞ்சுகளை பதம் பிரிக்கும் பணி மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் நடக்கும். சென்ற ஆண்டு பஞ்சுவின் விலை கிலோவிற்கு 40 முதல் 45 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்தாண்டு போதிய மழை இல்லாததால் இலவ பஞ்சு விலை 30 முதல் 35 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இலவம் பஞ்சு விலை குறைவால் இதை நம்பியுள்ள விவசாயிகள் போதிய விலை கிடைக்கமல் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

**நெல் அறுவடை இயந்திரங்களுக்கு தட்டுப்பாடு : நெற்பயிர்கள் தரையோடு தரையாக சாய்ந்தது : அறுவடை செய்யமுடியாமல் விவசாயிகள் தவிப்பு**

பேய்க்குளம் : பேய்க்குளம் சுற்றுவட்டார கிராமங்களில் நெல் அறுவடை மெஷின் தட்டுப்பாட்டால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.
பேய்க்குளம் சுற்றுவட்டார கிராமங்களில் பெரும்பான்மையான விவசாய நிலங்களில் நெற்பயிர் பயிரிடப்பட்டு அறுவடை மும்முரமாக நடந்து வந்தது. நெற்பயிர் அறுவடை செய்ய வெளி மாவட்டங்களிலிருந்து ஏஜென்டுகள் மூலம் மெஷின் கொண்டுவரப்பட்டு அறுவடை பணிகள் நடந்து வந்தது. விவசாய நிலங்களில் வரப்பு ஓரங்களில் உள்ள நெற்பயிர்களை கூலி தொழிலாளிகளைக் கொண்டு சிறிதளவு இடங்களை அறுவடை செய்த பின்னரே அறுவடை மெஷினை கொண்டு அறுவடை செய்ய முடியும். இந்நிலையில் கூலி தொழிலாளிகள் கூலி அதிகம் கேட்பதாலும், தட்டுப்பாட்டாலும் அறுவடை செய்யும் பணியில் மந்தநிலை ஏற்படுகிறது.

மேலும் நெல் அறுவடை மெஷினில் அவ்வப்போது ஏற்படும் ரிப்பேரை சரிசெய்வதற்கும், வெல்டிங் செய்வதற்கும் தற்போதுள்ள கரண்ட் கட்டால் மேலும் அறுவடை பணிகளில் முட்டுக்கட்டை ஏற்படுகிறது. இதற்கும் மேலாக நீர்ப்பிடிப்பு உள்ள அறுவடை பகுதிகளில் மெஷின் சிக்கிக் கொள்கிறது. இது போன்ற பகுதிகளில் வேறு வகையான அறுவடை மெஷின் தேவைப்படுகிறது. அத்தகைய மெ ஷினால் வைக்கோல் சேதமடைந்து, மாடுகளுக்கு தீவனப்பொருளுக்கு லாயக்கற்றதாகி விடுகிறது.
இத்தகைய பல்வேறு காரணங்களால் இப்பகுதிகளில் கருங்கடல், இனமால்குளம், விராக்குளம், கோமாநேரி உள்ளிட்ட பகுதிகளில் அறுவடை செய்ய ௦மல் நெற்பயிர்கள் தரையோடு தரையாக மண்டிக்கிடக்கிறது. இந்நிலை நீடிக்கும் பட்சத்தில் விவசாயிகளுக்கு கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத நிலையே நீடிக்கும்.

**நீர்வள நிலவள திட்டத்தில் விவசாயிகள் பட்டறிவு பயணம்**

தூத்துக்குடி : புதூர் வட்டாரத்தில் நீர்வள நிலவள திட்டத்தில் விவசாயிகள் பட்டறிவு பயணம் சென்றனர்.
வைப்பார் உப வடிநில பகுதியில் உள்ள அருணாச்சலபுரம், நம்பிபுரம், பொன்னையாபுரம், தங்கமாள்புரம் மற்றும் படர்ந்தபுளி கிராம விளைபொருள் உற்பத்தியாளர் குழு உறுப்பினர்களை வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பாக விவசாயிகள் பட்டறிவு பயணம் சென்றனர். தூத்துக்குடி வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) முருகானந்தம் பட்டறிவு பயணம் மேற்கொள்ளும் விவசாயிகளிடம் பேசும் போது மலர் வணிக வளாகம் செயல்பாடுகள் குறித்தும், அறுவடை பின் செய் நேர்த்தி தொழில் நுட்பங்களான சேமித்தல், காயவைத்தல், தரம்பிரித்தல் தொழில்நுட்பங்களையும் கடைபிடிக்கும்படி குறிப்பிட்டார். விளைபொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய சேமிப்பதற்கு ஒழுங்குமுறை விற்பனை கூடங்களை பயன்படுத்துமாறு பட்டறிவு பயணத்தில் உள்ள விளைபொருள் உற்பத்தியாளர்களிடம் கேட்டுக் கொண்டார். விவசாயிகள் பட்டறிவு பயணம் கோவில்பட்டி

வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) பாண்டியன் தலைமையில் சென்றனர். தூத்துக்குடி நிலா குளிர்பதன கிடங்கில் விளைபொருள் சேமிப்பு, தரம் கெடாமல் இருக்க கடைபிடிக்கும் தொழில் நுட்பங்களை நிலா குளிர்பதன கிடங்கு மேலாளர் ஜேம்ஸ் ஜெயராஜ் மற்றும் ஜீவா கருத்துக்களை வழங்கினார்.

கிள்ளிகுளம் விதை சுத்திகரிக்கும் நிலையத்தில் சான்று பெற்ற விதைகள் பெறுவது பற்றியும், சுத்தம் செய்வது பற்றிய தொழில் நுட்பங்களை விதை சுத்திகரிக்கும் நிலையத்தில் விவசாயிகள் நேரடியாக பார்வையிட்டனர்.நாகர்கோவில் விளைபொருள் உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகள் சங்கத்தில் உள்ள காய்கறிகள் மற்றும் பழங்கள் மார்கெட்டினை விவசாயிகள் அனைவரும் பார்த்தனர். விளைபொருட்களை விவசாயிகள் சந்தைக்கு கொண்டு வருவது பற்றியும் விளை நிர்ணயம் செய்வது பற்றியும் நுகர்வோர்களுக்கு குறைந்த விலையில் காய்கறி கிடைப்பது பற்றியும் மார்கெட்டின் பொறுப்பு அலுவலர் பேசினார்.

காவல் கிணறு மலர் வணிக வளாகத்தில் மலர் உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகள் முன்னிலையில் மலர்களுக்கு விலை நிர்ணயம் செய்வது பற்றிய கருத்துக்களை மலர் வணிக வளாக பொறுப்பாளர் வேளாண்மை உதவி அலுவலர் ஆனந்தன் கூறினார். கன்னியாகுமரியில் உள்ள தோட்டக்கலை பண்ணையின் தோட்டக்கலை அலுவலர் குமரேசன் பண்ணையில் உள்ள மா, சப்போட்டா மற்றும் நெல்லி சாகுபடி பற்றியும், மகசூல் பற்றியும் பேசினார்.மேலும் மா ஒட்டுக் கன்றுகள், சப்போட்டா கன்றுகள் பண்ணையில் விற்பனை செய்வது பற்றியும் பேசினார். விளைபொருள் உற்பத்தியாளர்கள் பட்டறிவு பயண ஏற்பாட்டினை புதூர்வட்டார வேளா ண்மை உதவி அலுவலர் (வேளாண் வணிகம்) பெருமாள் செய்திருந்தார். மேலும் பட்டறிவு பயணத்தின் போது வேளாண்மை உதவி அலுவலர்கள் பாஸ்கரன் மற்றும் ராஜா உடன் இருந்தனர்.

**இளநீர் விலை 'விர்ர்'**

பேரம்பாக்கம் : கோடை வெயில் சுளீரென அடிக்கத் துவங்கி உள்ளதால், பேரம்பாக்கம் பகுதியில் இளநீர் விலை உயர்ந்துள்ளது. கடந்த வாரம் வரை ஏழு ரூபாய்க்கு விற்று வந்த இளநீர், தற்போது, 15 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இளநீரின் விலை உயர்வால், ஏழை மக்கள் பலர், தர்ப்பூசணிக்கு மாறியுள்ளனர். ஒரு தர்ப்பூசணிக் துண்டு இரண்டு ரூபாய்க்கு விற்கப்படுவதால், தங்களது தாகத்தை தர்ப்பூசணி மூலம் தீர்த்துக் கொள்கின்றனர்.

**கள்ளக்குறிச்சியில் செம்மை நெல் சாகுபடி தீவிரம்! சொட்டு நீர் பாசனத்தில் விவசாயிகள் ஆர்வம்**

கள்ளக்குறிச்சி : சொட்டு நீர் பாசனத்தால் கள்ளக்குறிச்சி, சின்னசேலம் பகுதி விவசாயிகள் கூடுதல் மகசூல் கிடைத்து அதிக லாபமடைந்து வருகின்றனர்.
விழுப்புரம் மாவட்டத் தில் கள்ளக்குறிச்சி அதிகளவு விவசாய நிலங் களை உள்ளடக்கியுள் ளது. சின்னசேலம் சுற்றுப்புற கிராமங்களிலும் பல ஆயிரம் பரப்பளவில் விவசாய பயிர்கள் செய்யப் பட்டு வருகிறது. விவசாய நிலங் கள் அழிந்து, மனைகளாக மாறி வருவதாலும், உரிய நேரத்தில் பெய்ய வேண் டிய பருவ மழை பெய்யாமல் போனதாலும் அரசு விவசாயத்தில் பல்வேறு வகைகளில் விவசாயத்தை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அதன்படி சொட்டு நீர் பாசனம் மற்றும் செம்மை நெல் சாகுடியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

கள்ளக்குறிச்சி தோட் டக்கலை மற்றும் வேளாண்மைத் துறையினர் கள்ளக்குறிச்சி மற் றும் சின்னசேலம் பகுதியில் செம்மை நெல் சாகுபடியை ஊக்கப்படுத்த தீவிர முயற்சி மேற் கொண்டு வருகின்றனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக செம்மை நெல் மற்றும் சொட்டு நீர் பாசனத்தில் இப்பகுதி விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். அரசு தரும் பயிற்சி, அறிவுரை ஓரளவிற்கு பயன் தந்தபோதிலும், ஒரு விவசாயி மற்றொரு விவசாயியை அறுவடையில் கிடைத்த

மகசூல், செலவு விபரம் கேட்டபின், இதே முறையில் பயிரிட முன்வருகின்றனர்.

மாவட்டத்தில் கள்ளக் குறிச்சி, சின்னசேலம் மற் றும் வானூர் பகுதியில் செம்மை நெல் சாகுடி மற்றும் சொட்டு நீர் பாசனம் அதிகரித்துள்ளது. இதனால் கலெக்டர் பழனிசாமி இந்த மூன்று பகுதியிலும் தோட்டக்கலைத் துறை, வேளாண்மைத் துறை சிறப்பாக செயல்படுவதாக பாராட்டு தெரிவித்துள்ளார். குறைந்த நீரில் கூடுதல் மகசூல் என்ற நோக்கத்தில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருவதால் வரும் ஆண்டுகளில் விழுப்புரம் மாவட்டத்தில் உணவு பொருட்கள் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

சொட்டு நீர் பாசனம் குறித்து கள்ளக்குறிச்சி அடுத்த தச்சூர் பனஞ் சாலை விவசாயி அறிவழகன் கூறியதாவது: தோட்டக்கலைத் துறையினர் கூறிய அறிவுரையின்பேரில் தற் போது நான் சின்ன வெங்காயம் 10 சென்ட் மட்டும் பயிர் செய்தேன். அதிக மகசூல் கிடைத்ததுடன், பெல்லாரி வெங்காயம் போல அளவிலும் பெரிதாக உள்ளது. தற்போது மரவள்ளி சொட்டு நீர் பாசனம் மூலம் பயிர் செய்து வருகிறேன். இனி வரும் காலங்களில் மற்ற விவசாய பயிர்களையும் சொட்டு நீர் பாசனத்தின் மூலமே நடைமுறைப்படுத்த உள்ளேன் என்றார்.

**நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை பயன்படுத்த விவசாயிகளுக்கு வேண்டுகோள்**

விழுப்புரம் : நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் செயல்படும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை விவசாயிகள் பயன்படுத்திக் கொள் ளுமாறு மண்டல மேலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
விழுப்புரத்தில் நடந்த விவசாயிகள் குறைகேட்பு கூட்டத்தில் மாவட்ட நுகர் பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் குணசேகரன் பேசுகையில், விழுப் புரம் மாவட்டத்தில் நுகர் பொருள் வாணிபக் கழகம் சார்பில் 7 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்படுகின்றன. அரகண் டநல்லூர், விக்கிரவாண்டி கொள்முதல் நிலையங்களில் தான் விவசாயிகள் நெல்லை கொண்டு வந்து விற்று பயன் பெற்றுள்ளனர்.
திருக்கோவிலூர், கள்ளக்குறிச்சி, உளுந்தூர் பேட்டை நேரடி கொள்முதல் நிலையங்களுக்கு விவசாயிகள் வருவதில்லை. மார்க்கெட் கமிட்டிகளுக்கு கொண்டு சென்று விலை குறைவாக விற்கின்றனர். இதனால் பெரிய வியாபாரிகள் தான் பயன்பெறுவர். விவசாயிகளுக்கு பயன் கிடையாது. மேலும் 300 நெல் மூட் டைகளுக்கு மேல் இருப்பு இருந்தால் விவசாயிகளின் இடத்திற்கே நாங்கள் நேரடியாக வந்து நெல்லை கொள்முதல் செய்கிறோம். விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு வந்து விற்று பயன் பெறலாம். இவ்வாறு மண்டல மேலாளர் குணசேகரன் பேசினார்.

**கொப்பரை கொள்முதல் இல்லாததால் பாதிப்பு : வேதனையில் விருதுநகர் விவசாயிகள்**

விருதுநகர் : விருதுநகர் மாவட்டத்தில் கொப்பரை தேங்காய் கொள்முதல் மையம் இல்லாததால் விலை கிடைக் காமல் விவசாயிகள் வேதனையில் உள்ளனர்.
விருதுநகர் மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரப் பகுதிகளான வத்திராயிருப்பு, ஸ்ரீவில்லிப்புத்தூர், ராஜபாளையம், சேத்தூர், தளவாய்புரம் ஆகிய பகுதிகளில் விவசாயிகள் கொப்பரை தேங்காய் பயிர் செய்துள்ளனர். தற்போது வெளி மார்க்கெட்டில் தேங்காய் விலை மிகவும் குறைந்து விட்டது. இதனால் தேங்காய் உற்பத்தி செய்துள்ள விவசாயிகள் குறைந்த விலை கிடைப்பதால் நஷ்டமடைந்துள்ளனர்.
தேர்தல் வாக்குறுதி: மத்திய அரசு தேர்தல் நேரத்தில் விவசாயிகளின் விளை பொருள்களுக்கு குறைந்த பட்ச ஆதார விலை தரப்படும். விளை பொருள்களை விவசாயிகள் வீடுகளுக்கு வந்து அரசு கொள்முதல் செய்யும் என அறிவித்திருந்தது. இன்று வரை இந்த வாக்குறுதியை செயல்படுத்த மத்திய அரசு முன் வரவில்லை.
இதன் காரணமாக விருதுநகர் மாவட்டத்தில் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. இதிலிருந்து

மாதம் ஒன்றுக்கு ஆயிரம் டன் கொப்பரை தேங்காய் உற்பத் தியாகிறது. வெளி மார்க்கெட்டில் கிலோ ஒன்றுக்கு 24 ரூபாய்க்கு மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது.
கொள்முதல் மையங்கள்: கொப் பரை கொள்முதல் மையங்கள் தமிழ்நாட்டில் 9 இடங்களில் மத்திய அரசு அமைத்துள்ளது. இதில் ஈரோடு மாவட்டத்தில் மூன்றும், கோவை மாவட்டத்தில் இரண்டும், மதுரை மாவட்டத்தில் நான்கு இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையங்களில் கொப்பரை ஒரு கிலோவிற்கு குறைந்த பட்ச விலையாக 44 ரூபாய்க்கு வாங்கப்படுகிறது.

நீண்ட கால கோரிக்கை: விருதுநகர் மாவட்ட விவசாயிகள் நீண்ட காலமாக கொப்பரை கொள்முதல் மையம் அமைக்க கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால் மத்திய அரசு இது வரை கொப்பரை கொள்முதல் மையம் அமைக்க முன் வரவில்லை. விவசாயிகள் தென்னை மரங்களை வெட்டி அழிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.
ராமச்சந்திர ராஜா, தமிழக விவசாயிகள் சங்க தலைவர் கூறியதாவது: மத்திய அரசு தேர்தலின் போது விவசாயிகளின் விளை பொருள்களை வீடு தேடி குறைந்த பட்ச ஆதார விலைக்கு கொள்முதல் செய்யப்படும் என அறிவித்தது. இன்று வரை செயல் படுத்தவில்லை.தென்னை மரங்களை அழிக்கும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். அரசு நடவடிக்கை எடுத்து விருது நகரில் கொப்பரை கொள்முதல் மையம் துவக்க வேண்டும், என்றார்.

**ஓட்டுக்காக கரும்புக்கு விலை உயர்வு: விவசாயிகள் சங்கம் 'காட்டம்'**

திருப்பூர் : 'தேர்தலில் ஓட்டு வாங்குவதற்காகவே, அடுத்தாண்டு அரவைக்கு வரும் கரும்புக்கு தி.மு.க., அரசு விலை உயர்வு அறிவித்துள்ளது' என்று, தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர். தமிழக பட்ஜெட்டில், 2010-11ம் ஆண்டு அரவை பருவத்தில் கரும்பு டன்னுக்கு 2,000 ரூபாய், நெல்லுக்கு 1,100 ரூபாய் விலை நிர்ணயம் செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இது குறித்து, தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க, புகளூர் கிளை தலைவர் சண்முகராஜ் கூறியதாவது: ஒரு டன் கரும்புக்கு 2,500 ரூபாய் விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்பது கரும்பு விவசாயிகளின் கோரிக்கை. ஏற்கனவே, டன்னுக்கு 1,550 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டிருந்த கரும்பு விலையில் 100 ரூபாய் உயர்த்தி, நடப்பு பருவத்திற்கு 1,650 ரூபாய் வழங்கப்படும் என்றும், வரும் அரவை பருத்துக்கு (2010-11ம் ஆண்டில்) போக்குவரத்து கட்டணம் மற்றும் ஊக்கத்தொகையுடன் சேர்த்து டன்னுக்கு 2,000 ரூபாய் வழங்கப்படும் என்றும் பட்ஜெட்டில் அறிவித்துள்ளனர். தற்போது, அரசு சர்க்கரை ஆலைகளில் பிழி திறன் போன்றவற்றை காரணம் காட்டி, அதிகபட்சமாக 1,485 ரூபாய் வரை மட்டுமே வழங்குகின்றனர்.

வெளிமார்க்கெட்டில் சர்க்கரை விலை கிலோ 36 ரூபாய்க்கு விற்கும் நிலையில், தனியார் சர்க்கரை ஆலைகளில் 1,735 ரூபாய் வரை விலை நிர்ணயம் செய்து வழங்குகின்றனர். அடுத்தாண்டு அரவை பருத்தில் 2,100 ரூபாய் வரை விலை கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. இருப்பினும், கரும்பு விவசாயிகள் தரப்பில் 2,300 ரூபாய் வரை விலையை எதிர்பார்த்துள்ளோம். ஆனால், இந்தாண்டு கரும்பு சாகுபடி செய்த விவசாயிகள் பயன்பெறும் வகையில் விலை உயர்வு வழங்காமல், 'வரும் அரவை பருத்தில்' என்று குறிப்பிட்டு, அடுத்தாண்டு கரும்பு டன்னுக்கு 2,000 ரூபாய் வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.
அடுத்த ஆண்டில் மழை பொழிவு எப்படியிருக்கும்; கரும்பு விவசாயத்தில் ஈடுபடுவதற்கான சாத்தியக்கூறுகள் எப்படியிருக்கும் என்பதை வரையறுத்து கூற முடியாது. அதனால். அடுத்தாண்டு அரவைக்கு வரும் கரும்புக்கு 2,000 ரூபாய் வழங்கப்படும் என்பது தேர்தலை நோக்கமாக கொண்ட அறிவிப்பாகவே உள்ளது. இவ்வாறு, சண்முகராஜ் கூறினார்.

**இயற்கையை அழித்தால் நமக்கு தான் பாதிப்பு!: வன நாள் விழிப்புணர்வு முகாமில் எச்சரிக்கை**

மார்ச் 22,2010,00:00 IST



கூடலூர்: "அழிந்து வரும் இயற்கையை பாதுகாக்காவிட்டால், எதிர்காலத்தில் பாதிப்பு ஏற்படும்," என கூடலூர் ஜீன்பூல் தாவரவியல் மையத்தின் உதவி வனப் பாதுகாப்பாளர் தெரிவித்தார். உலக வன நாளை முன்னிட்டு, கூடலூர் வனக்கோட்டம், தேவாலா வனச்சரகம் சார்பில், நேற்று விழிப்புணர்வு பேரணி மற்றும் சுற்றுச்சூழல் பயிற்சி முகாம் நடந்தன. தேவாலா வனச்சரக அலுவலகத்தில் துவங்கிய பேரணியில், வனச்சரகர் பாண்டி பெருமாள் தலைமை வகித்தார். மரங்களை வளர்ப்போம்; வனங்களை பாதுகாப்போம்; சுற்றுச்சூழல் மாசுபடுவதையும், வனத்தீ ஏற்படுவதையும் தடுப்போம் என கோஷம் எழுப்பப்பட்டது; தேவாலா பஸ் ஸ்டாண்டில் முடிந்தது.

வனவர் ராஜேந்திரன், கூடலூர் பாரதியார் பல்கலைக் கழக கலை அறிவியில் கல்லூரி என்.எஸ்.எஸ்., திட்ட அலுவலர் சுரேஷ் மற்றும் மாணவர்கள், நெல்லியாளம் நகராட்சி கவுன்சிலர் கோபிநாத், தாவர ஆய்வாளர் விமல் மற்றும் வன ஊழியர்கள், கட்சி பிரமுகர்கள் பங்கேற்றனர். வனச்சரகப் பகுதியில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

நாடுகாணி ஜீன்பூல் தாவரவியல் மையத்தில், சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு முகாம் நடந்தது. ஜீன்பூல் தாவரவியல் மைய உதவி வனப்பாதுகாப்பாளர் நெடுஞ்செழியன் தலைமை வகித்து பேசுகையில், "நாம் வசிக்கும் பகுதியில் வனங்களை பாதுகாப்பதன் மூலம், பல்லுயிர்கள் பெருகுவதுடன், சுகாதாரமான காற்று கிடைக்கும்; உரிய நேரத்தில் மழை பொழியும். இயற்கையை அழிப்பதால், தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தின் பாதிப்பை உணரத் துவங்கியுள்ளோம். இயற்கையை பாதுகாக்காவிட்டால், காலநிலையில் மாற்றம் ஏற்பட்டு, நாம் அவதிப்பட வேண்டியிருக்கும். எதிர்கால நலன் கருதி, மரக்கன்றுகள் வளர்க்க, மாணவர்கள் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்," என்றார். என்.எஸ்.எஸ்., மாணவர்கள், வன ஊழியர்கள் பங்கேற்றனர். வனவர் முத்துசாமி நன்றி கூறினார்.

* நீலகிரி தெற்கு வனக்கோட்ட வன அலுவலர் சதீஷ் அறிவுரையின் படி, தெற்கு வனக்கோட்டம் சார்பில் பிரீக்ஸ் பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. பள்ளி முதல்வர் லட்சுமணன் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலை வகித்தனர். வனக்கோட்ட வனச்சரகர் பெள்ளன், வனவர் பாலகிருஷ்ணன், வனக்காப்பாளர் சிவக்குமார், தனி துணை தாசில்தார் ராஜகோபாலன் பங்கேற்றனர்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**தேயிலை தூள் உற்பத்தியில் இயற்கை எரிபொருளை பயன்படுத்துவதால் சுற்றுச்சூழல் பாதிப்பு குறைகிறது குன்னூர் உபாசியில் நடந்த விழாவில் தகவல்**

*குன்னூர், மார்ச்.22–*

*தேயிலை உற்பத்தியில் இயற்கை எரி பொருளை பயன்படுத்துவதால் சுற்றுச்சூழல் பாதிப்பு குறைந்து வருகிறது என்று உபாசியில் நடந்த தொழில்நுட்ப வார நிறைவு விழாவில் தகவல் தெரிவிக்கப்பட்டது.*

*விவசாயிகள் விழா*

*தேயிலை வாரியம், உபாசி வேளாண்மை அறிவியல் நிலையம் ஆகியவை இணைந்து தொழில் நுட்ப வார விழாவை உபாசி அரங்கில் நடத்தின. முதல் நாள் நிகழ்ச்சியாக நீலகிரி மாவட்ட விவசாயிகள் விழா கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தமிழக கதர்வாரிய துறை அமைச்சர் கா.ராமச் சந்திரன் கம்ப்யூட்டர் இணைய தளத்தை தொடங்கி வைத் தார். தேயிலை வாரிய தென் மண்டல செயல் இயக்குனர் ஆர்.டி.நசீம் கண்காட்சியை தொடங்கி வைத்தார்.*

*தொழில்நுட்ப வாரத்தை முன்னிட்டு தேயிலை உற்பத்தியில் எரிபொருள் சிக்கனம், தேயிலை சாகுபடி யில் புதிய தொழில் நுட்பம், மலை பகுதியின் தோட்டக் கலை பயிர்களில் புதிய தொழில் நுட்பம் போன்ற வைகள் குறித்து விவசாயி களுக்கு செயல்முறை விளக் கம் செய்து காட்டப்பட் டன.*

*நிறைவு விழா*

*தொழில்நுட்ப வாரத்தின் நிறைவு விழா குன்னூர் உபாசி அரங்கில் நடைபெற்றது. விழாவில் உபாசி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட இயக்குனரும், தலைமை விஞ்ஞானியுமான டாக்டர் குமார தொழில் நுட்ப வார அறிக் கையை வாசித்தார். அப்போது அவர் கூறியதாவது:–*

*உபாசி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு சாகுபடி முறைகள் குறித்த தொழில் நுட்ப விபரங்கள் தெரிவிக்கப் பட்டு வருகின்றன.*

*தொழில் நுட்ப வாரத்தை முன்னிட்டு விவசாயிகள் செல்போன் மூலமாக சாகுபடி தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ளும் வகையில் கம்ப்யூட்டர் இ.மெயில் மூலம் தகவல் தெரிவிக்கும் வசதி தொடங்கப்பட்டு உள்ளது. இதனை விவசாயிகள் பயன் படுத்தி கொள்ள வேண்டும்.*

*மேற்கண்டவாறு டாக்டர் குமாரவடிவேலு பேசினார்.*

*கையேடு*

*விழாவில் மண் மாதிரி எடுத்தல் குறித்த கையேட்டை உபாசி பொது செயலாளர் உல்லாஸ் மேனன் வெளி யிட்டார். அதனை உபாசி ஆலோசகர் டாக்டர் முரளி தரன் பெற்று கொண்டார். விழாவில் உபாசி ஆலோசகர் டாக்டர் முரளிதரன் பேசிய தாவது:–*

*தேயிலை விவசாயிகளுக்கு விவசாய தொழில்நுட்ப முறை களை உபாசி வேளாண்மை அறிவியல் நிலையம் வழங்கி வருகிறது. இதன் மூலம் தரமான தேயிலை உற்பத்தி நடைபெற்று வருகிறது.*

*இயற்கை எரிபொருள்*

*சமீப காலமாக தேயிலை உற்பத்தியில் எரிசக்தி சிக்கனம் என்பது வலியுறுத்தப்பட்டு வருகிறது. இயற்கை எரி பொருளை பயன்படுத்துவதால் சுற்றுச்சூழல் பாதிப்பு குறை வடைந்து வருகிறது. எரி பொருள் சிக்கனத்தை எல்லா தேயிலை தொழிற் சாலைகளும் பின்பற்ற வேண்டும்.*

*இவ்வாறு டாக்டர் முரளிதரன் பேசினார்.*

*விழாவில் உபாசி இயக்குனர் டாக்டர் மோகன்குமார், தேயிலை வாரிய உதவி இயக்குனர் தியோரி ஆகியோர் பேசினர். உபாசி வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானி ராமமூர்த்தி வரவேற்றார். முடிவில் டாக்டர் சண்முகம் நன்றி கூறினார். நிறைவு விழாவில் சிறு தேயிலை விவ சாயிகள் சங்கத்தை சேர்ந்த பிரதிநிதிகள் தொழில்நுட்ப வாரத்தை முன்னிட்டு நடை பெற்ற நிகழ்ச்சிகளில் பங்கு பெற்ற நன்மைகள் குறித்து எடுத்து கூறினர்.*

**பண்ணை பணியாளர்களுக்கு மலைப்படி வழங்க வேண்டும் ஊட்டியில் நடந்த மாநில மைய செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்**

*ஊட்டி, மார்ச்.22–*

*பண்ணை பணியாளர் களுக்கு மலைப்படி வழங்க வேண்டும் என்று ஊட்டியில் நடந்த தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர் கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் மாநில மைய சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.*

மாநில செயற்குழு கூட்டம்

*ஊட்டி கேரள கிளப் அரங்கில் நேற்று தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் மாநில மைய சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாநில தலைவர் கே.கணேசன் தலைமை தாங்கினார்.*

*பொது செயலாளர் சண்முகம் வரவேற்று பேசினார். இதில் மாநில நிர்வாகிகள் ராஜா சுப்ர மணியன், சீனிவாசன், உதயகுமார், தமிழ்மணி, மகாலிங்கம் உள்பட மாநில செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட தலைவர்கள், செயலாளர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் 80 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. முடிவில் மாநில பொருளாளர் கோதண்பாணி நன்றி கூறினார்.*

மாநில மாநாடு

*இந்த தீர்மானங்கள் குறித்து மாநில தலைவர் கணேசன் நிருபர்களுக்கு பேட்டி அளித் தார். அப்போது அவர் கூறியதாவது:–*

*தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் மாநில மைய சங்கத்தின் 21–வது மாநில மாநாடு சென்னை வள்ளுவர் கோட்டத்தில் ஜூன் 28, 29 ஆகிய தேதிகளில் நடக்கிறது. மாநாட்டில் தமிழக முதல்–அமைச்சர் கருணாநிதி மற்றும் தமிழக அமைச்சர்களை அழைத்து சிறப்பாக நடத்துவது என்று ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*தமிழக அரசில் அனைத்து துறைகிளிலும் அலுவலக உதவியாளர் பணியிடங்கள் ஆட்குறைப்பு அரசாணை யினால் பணிச்சுமையை ஏற்படுத்தி உள்ளது. எனவே இந்த ஆணையை ரத்து செய்து முன்போல் 6–1 என்ற கணக்கில் பணியிட வழங்கிட வேண்டும்.*

தொகுப்பு ஊதியம்

*தமிழக அரசில்அனைத்து துறைகளிலும் காலியாக உள்ள டி பிரிவு பணியிடங்களில் பல்வேறு துறைகளில் பணிபுரியும் பகுதி நேரப் பணியாளர்கள், தினக்கூலி பணியாளர்கள், தொகுப்பு ஊதிய பணியாளர்களை கொண்டு நிரப்ப வேண்டும்.தமிழ்நாடு தோட்டக்கலை துறையில் 10 ஆண்டுகள் பணிபுரியும் பண்ணை பணி யாளர்கள் அனைவருக்கும் காலமுறை ஊதியம் மற்றும் கல்வி தகுதி உள்ள அனைவருக்கும் இளநிலை உதவியாளர் பதவி வழங்கிட வேண்டும்.*

ஓய்வுபெறும் வயது

*தமிழக அரசு ஊழியர்களின் ஓய்வு பெறும் வயது 60 ஆக இருக்கும் போது தோட்டக் கலைதுறையில் பணிபுரியும் பணியாளர்களின் ஓய்வு பெறும் வயது மட்டும் 58 என நிர்ணயித்து ஓய்வு வழங்குவதை உடனே நிறுத்தி அரசு ஆணையினை பின் பற்றி 60 வயதாக நிர்ணயம் செய்ய வேண்டும்.*

*மலைப்பகுதிகளில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் வெப்ப ஆடை, முன்பணம் மற்றும் டி பிரிவு பணியாளர்களுக்கு வழங்குவது போல் பண்ணை பணியாளர்களுக்கும் மலைப் படி வழங்க வேண்டும்.*

*கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களை முன்பு போல் அரசு ஊழி யர்களாக அறிவிக்க வேண் டும் என்பது போன்ற 80 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.*

இவ்வாறுஅவர் கூறினார்.

*கூட்டத்துக்கான ஏற்பாடு களை சங்கத்தின் நீலகிரி மாவட்ட தலைவர் ஆறுமுகம் மற்றும் கிருஷ்ணமூர்த்தி, மோகன் குமார் ஆகியோர் செய்திருந்தனர்.*